[1972 ஆகஸ்ட் 19

S.I.E.T. College for Women, Madras

* 78. *Q.*—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for education and Local Administration be pleased to state—

(*a*) whether swimming dress has been made a compulsory wear for the students of the S.I.E.T. College for Women in Madras;

(*b*) if so, whether the Director of Collegiate Education has approved this; and

(*c*) the details thereof?

சென்னை, எஸ்.ஐ.ஈ.டி. மகளிர் கல்லூரி

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, எஸ்.ஐ.ஈ.டி. மகளிர் கல்லூரி மாணவியர் நீச்சல் உடையை அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், கல்லூரிக் கல்வி இயக்குநர் இதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளாரா ?

(உ) அது குறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) & (உ) கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு, இது சம்பந்த மாக ஒரு அதிகாரமும் இல்லை.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, நீச்சல் உடை கட்டாயப்படுத்தப்பட்டது என்று அமைச்சர் அவர்களின் பதிலிலிருந்து தெரிகிறது. அங்கே கலை அறிவு கற்பிக்கப்படு கிறதா, அதற்கு நீச்சல் உடை தேவையா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : நீச்சல் அடிக்கிறதினால் தேவைப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தக் கல்லூரியிலே முதல் தரமான நீச்சல் குளம் ஒன்று ஏற்படுத்தி யிருக்கிறார்கள். நீச்சல் பயிற்சியில் ஒவ்வொரு மாணவியும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1972 ஆகஸ்ட் 19]

ஈடுபட வேண்டுமென்ற முறையில் அவர்கள் ஒவ்வொருவரும் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டுமென்று போட்டிருக்கிறார்கள். அந்தப் பயிற்சிக்காக நேரம் ஒதுக்கப்பட்டு, அதற்காகவே பயிற்சி பெற்ற உடற்பயிற்சி ஆசிரியை கூட நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த வகையில் தான் கட்டணம் விதிக்கப்பட்டிருக்கிறது. இதிலே கல்லூரிக் கல்வி இயக்குநர் தலையிட்டு இந்தக் கட்டணம் விதிக்க வேண்டாமென்று சொல்லுவதற்கு வழியில்லை. பல்கலைக் கழகம் தான் இதுபோன்ற காரியங்களில் தலையிட்டு ஏதாவது செய்ய வேண்டியிருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, எத்தனை மகளிர் கல்லூரிகளில் நீச்சல் குளங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது இந்தக் கல்லூரியில் தான் இந்த மாதிரிக் கட்டணம் விதிக்கப்படுகிறது. கிட்டத்தட்ட ரூ. 2 லட்சம் செலவில் நீச்சல் குளம் கட்டப்பட்டு, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 20 ஆயிரம் செலவில் அது பராமரிக்கப்பட்டு வருகிறது. அந்தப் பயிற்சிக்காக தனியாக டைரக்டரெஸ் ஒருவரும் நியமிக்கப்பட்டிருக்கிறார், அதற்கான வசதி வாய்ப்புகளும் இருக்கின்றன என்று தான் கூறப்படுகிறது.

Car for the Worshipful Mayor of Madras

* 79 *Q.*—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for education and Local Administration be pleased to state—

(*a*) whether the Mayor of Madras has been permitted to have an imported car for her use; and

(*b*) if so, the details thereof?

பெருந்தகை மாநகர் மேயருக்கு கார்

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இறக்குமதி செய்யப்பட்ட ஒரு காரைப் பயன்படுத்திக் கொள்ள சென்னை மேயருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS